Academic Research News

# Academic Research News

*Peer-Reviewed Journal*

58

**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

# *Kalingathupparani;* Timeline and Perception

**Dr. R. Govindaraj,** Assistant Professor of Tamil, Thiagarajar College, Madurai, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0007-8650-9666**
Received: 1 April 2025; Revised: 21 April 2025; Accepted: 9 May 2025; Available Online: 30 July 2025.

## Abstract

*Since the Sangam period, minor literary traditions have been gradually developing around the 12th century BCE. They began to exert a notable influence within the Tamil literary world. In the context of the Tamil language, it is plausible that these smaller literary genres originated as early as the Tolkappiyam period. The literary genres and devices such as song, oral expression, narrative text, rhythm, and figurative devices, are often associated with categories like Ammai, Aesthetics, Dhol, Virunthu, Iiyaibu, Pulan, and Ilaivu are considered part of minor literature (Citrilakkiyam). Several Tamil works including Panniru Patiyal, Venba Patiyal, Navaneetha Patiyal, Prabandha Marabiyal, Chidambara Patiyal, Ilakkana Vilakka Patiyal, Thonnool Vilakkam, Muthuveeriyam, Prabandha Thirattu, and the scholarship of U. V. Swaminatha Iyer, have contributed to define the scope of minor literature. Among them, "Kalingattuparani: occupies a distinctive place. The Parani form has been exemplified in this work. It has evolved as a celebratory genre extolling victory in war. Significantly, in the role of Parani, which was linked to divine worship was gradually transferred to the glorification of kingship and royal conquest. The structural and thematic traces of this Parani form can already be discerned in the Tolkappiyam and early Sangam texts. Thus, this article explores the subject under the themes of its timeline and perception in "Kalingattuparani."*

**Keywords*:*** *Kalingathuparani*, Kotravai, War, Karunakara Thondaiman, Ananthapadaman.

## References

[1] Ragava Iyenkar, R. *Panniru Paddiyal.* Senthamizhp Pirasuram, 1951.
[2] Ramakrishnan, Ira. *Sittilakkiyam Oor Arimugam*. Saratha Pathippagam, Chennai, 2022.
[3] Kannaiya, A.V. *Kalingathuparani*. P.N. Acchukkudam, 1941.
[4] Gopalaiyar. A. *Moovarula (Rasarasa Sozhan Ula).* Senthamizh Manthiram, Putthakacchalai, 1925.
[5] Sanmukam Pillai, M. Suntharamoorthi. E. *Thivakaram Muthal Thokuthi*. Chennai Palkalaik Kazhakam, 1990.
[6] Saminathaiyar, U.V. *Purapporul Venpamalai*. U.Ve. Saminathaiyar Nool Nilaiyam, 1895.
[7] Sivagnanam, M. P. *Silappathikaram Mathuraik Kandam*. Ainthinai Pathippagam, 2003.
[8] Seenivasan, R. *Silappathikaram Moolamum Thiranayvum*. Aniyakam Pathippagam, 1990
[9] Jeyaraman, N.V. *Sittilakkiya Selvankal*. Manivasakar Pathippagam, Chidambaram, 2021.
[10] Balasubramaniyan, S. *Thiruppavai Vilakkam*. Pari Nilaiyam, 1995.
[11] Manikkavasakan, G. *Kalingathuparani*. Uma Pathippagam, 1998.
[12] Vimalanantham, Mathu. S. Tamil Illakkiya Varalaru. Mullai Nilaiyam. Chennai, 2014.
[13] Vellaivaranar, K. *Tholkappiyam Seyyuliyal Uraivalam*. 1989.
[14] Vaitthiyanatha Thesikar. *Ilakkana Vilakkap Paddiyal*. Sarasvathi Mahal Noolakam, Tanjore, 1974.

[15] Javakar, K. *Thinaikkodpadum Thamizhk Kavithaiyiyalum*. Kavya Pathippakam, Chennai, 2010.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

Academic Research News
Academic Research News
Peer-Reviewed Journal

Volume 3, SPL Issue 1, July 2025 E-ISSN: 2584-167X

# *கலிங்கத்துப்பரணி;* காலமும் கருத்தும்

**முனைவர் ரே. கோவிந்தராஜ்,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, தியாகராசர் கல்லூரி, மதுரை, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0007-8650-9666

**ஆய்வுச் சுருக்கம்**

*சங்க காலம் முதலாகக் கருக்கொண்டு மெல்ல மெல்ல வளர்ச்சியுற்று வந்த சிற்றிலக்கியங்கள் கி.பி.12ஆம் நூற்றாண்டு முதல் தமிழுலகில் பெருஞ் செல்வாக்குப் பெற்றன. தமிழ் மொழியைப் பொறுத்தவரையில் தொல்காப்பியர் காலத்தில் சிற்றிலக்கிய வகை தோன்றிவிட்டதெனலாம். இவ்விலக்கியத்தில் உள்ள பாட்டு, உரை, வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல், வனப்பு என்ற பெயரில் அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைவு ஆகிய பதிவுகள் சிற்றிலக்கியத்தின் கூறுகள் எனலாம். பன்னிரு பாட்டியல், வெண்பாப் பாட்டியல், நவநீதப் பாட்டியல், பிரபந்த மரபியல், சிதம்பரப் பாட்டியல், இலக்கணவிளக்கப் பாட்டியல், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், பிரபந்த தீபிகை, சுவாமிநாதம், பிரபந்தத் திரட்டு, ஆகிய நூல்கள் சிற்றிலக்கியத்தின் இலக்கணத்தை வரையறுத்துக் கூறுகின்றன. இச்சிற்றிலக்கிய வகைகளில் கலிங்கத்து பரணியும் ஒன்றாகும். இந்த பரணி தெய்வத்திற்குரிய இடம் அரசனுக்கெ மாறி போர் வெற்றியை கொண்டாடும் இலக்கியமாக பரணி வளர்ச்சி அடைந்திருக்கிறது. இதன் வடிவங்கள் தொல்காப்பியத்திலும் சங்க பனுவல்களிலும் உள்ளன. எனவே 'கலிங்கத்துப்பரணியின் காலமும் கருத்தும்' என்னும் பொருண்மையில் இக்கட்டுரை அமைகிறது.*

**குறிப்புச்சொற்கள்:** *கலிங்கத்துப் பரணி,* கொற்றவை, போர், கருணாகர தொண்டைமான், அனந்தபத்மன்.

**முன்னுரை**

சங்க காலம் முதலாகக் கருக்கொண்டு மெல்ல மெல்ல வளர்ச்சியுற்று வந்த சிற்றிலக்கியங்கள் கி.பி.12ஆம் நூற்றாண்டு முதல் தமிழுலகில் பெருஞ் செல்வாக்குப் பெற்றன. தமிழ் மொழியைப் பொறுத்தவரையில் தொல்காப்பியர் காலத்தில் சிற்றிலக்கிய வகை தோன்றிவிட்டதெனலாம். இவ்விலக்கியத்தில் உள்ள பாட்டு, உரை, வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல், வனப்பு என்ற பெயரில் அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைவு ஆகிய பதிவுகள் சிற்றிலக்கியத்தின் கூறுகள் எனலாம். பன்னிரு பாட்டியல், வெண்பாப் பாட்டியல், நவநீதப் பாட்டியல், பிரபந்த மரபியல், சிதம்பரப் பாட்டியல், இலக்கணவிளக்கப் பாட்டியல், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், பிரபந்த தீபிகை, சுவாமிநாதம், பிரபந்தத் திரட்டு, ஆகிய நூல்கள் சிற்றிலக்கியத்தின் இலக்கணத்தை வரையறுத்துக் கூறுகின்றன. “காப்பியம் போல் கதைத் தொடர்ச்சி இல்லாமல் அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றினை கொண்டு பாடப்பட்டிருக்கும். பேரிலக்கியங்கள் அறம், பொருள், இன்பம், வீடு நான்கும் உணர்த்தும். இவற்றில் ஒன்றோ பலவோ குறைந்துவரின் அவை சிற்றிலக்கியமாகும். பின்னைய நாளில் புற்றீசல் போன்று கிளைத்த நூல்கள் 96 வகையாகக் கொண்டு, இவற்றிற்கேற்ப இலக்கணம் வகுத்தனர். பன்னிரு பாட்டியல், வெண்பாப் பாட்டியல், நவநீதப் பாட்டியல், இலக்கண விளக்கப் பாட்டியல், சிதம்பரப் பட்டியல், பிரபந்தத் திரட்டு போன்ற பிரபந்த இலக்கண இயம்பும்.” (விமலானந்தம், மது. ச.) தனிப்பாடல்களையும் சிற்றிலக்கிய வகையில் அடக்குகின்றனர். அவற்றைத் தொகுத்துப் பார்க்கும் போது பின்வரும் விளக்கம் கிடைக்கின்றது:

1. **இறைவன், மன்னன், வள்ளல், சாதாரண மக்கள் முதலியவர்களில் ஒருவரைத் தலைவராகக் கொண்டு பாடப்படும் இலக்கிய வகை.**
2. **பாட்டுடைத் தலைவனின் வாழ்க்கையின் ஒரு பகுதியை மட்டும் பாடுபொருளாகக் கொள்ளும்.**
3. **அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப் பொருள்களுள் ஒன்றைப் பற்றி மட்டுமே கூறும்.**
4. **குறைந்த பாடல் எண்ணிக்கையைக் கொண்டு அமையும்.**
5. **பல்வேறு வகையான யாப்பு அமைப்புகளால் பாடப்படும்.**
6. **ஒவ்வொரு சிற்றிலக்கியமும் ஒவ்வொரு வகையான யாப்பில் அமைந்திருக்கும்.**

**பரணி**

போர்க்களத்தில் ஆயிரம் யானைகளைக் கொன்று வெற்றி கொண்ட வீரரைப் புகழ்ந்து பாடுவதைப் ‘பரணி’ என்று வழங்குவர்.

**ஆனை யாயிரம் அமரிடை வென்ற**
**மாணவனுக்கு வகுப்பது பரணி (இலக்கண., ப.206)**

என்பது இலக்கண விளக்கப் பாட்டியல் சூத்திரம். பெரும்போர் புரிந்து வெற்றி பெற்ற வீரனைச் சிறப்பித்துப் பாடுவதையும் பரணி என்று வழங்கும் மரபு உண்டு. இவ்வாறு பரணி நூல் அரசர் முதலியவர்கள் மேல் செய்யப்படுவதன்றி, தெய்வங்கள் மேலும் தத்தம் ஆசிரியர்கள் மேலும் அறிஞர்களால் இயற்றப் பெற்று வழங்கும். கலிங்கத்துப் பரணி, தக்கயாகப் பரணி, இரணியவதைப் பரணி, கஞ்சவதைப் பரணி, அஞ்ஞவதைப் பரணி, மோகவதைப் பரணி, பாசவதைப் பரணி என்பன அவற்றிற்கு எடுத்துக்காட்டுகளாகும். நூல் பாடுவோர் கொச்சகக்கலி என்னும் பாட்டின் உறுப்பாகிய ஈரடிக் கலித்தாழிசை என்ற உறுப்பை மேற்கொள்வது வழக்கம். இதனை,

**மயக்கறு கொச்சகத் தீரடி இயன்று**
**நயப்புறு தாழிசை உறுப்பிற் பொதிந்து**
**வஞ்சி மலைந்த உழிஞை முற்றித்**
**தும்பையிற் சென்ற தொடுகழல் மன்னனை**
**வெம்புசின மாற்றான் தானை வெங்களத்தில்**
**குருதிப் பேராறு பெருகுஞ் செங்களத்து**
**ஒருதனி ஏத்தும் பரணியது பண்பே (பன்னிரு பாட்டியல். ப.35)**

என்ற பன்னிரு பாட்டியல் சூத்திரத்தால் அறியலாம். பொதுவாக நூலில் கடவுள் வாழ்த்து, கடைதிறப்பு, காடு, காளிகோயில் முதலிய பல்வகைச் சிறப்புக்களும் பல்வேறு சுவைகள் கொப்புளிக்கும் படி அமைக்கப் பெறும் இந்த வழக்கத்தை,

**கடவுள் வாழ்த்துக் கடைதிறப் புரைத்தல்**
**கடும்பாலை கூறல் கொடுங்காளி கோட்டம்**
**கடிகணம் உரைத்தல் காளிக் கதுசொலல்**
**அடுபேய்க் கவள்சொலல் அதனல் தலைவன்**
**வண்புகழ் உரைத்தல் எண்புறத் திணை யுற**
**வீட்டல் அடுகளம் வேட்டல் (இலக்கண., ப.206)**

என்ற இலக்கண விளக்கச் சூத்திரப்பகுதியாலும்,

**தேவர் வாழ்த்தே கடைநிலை பாலை**
**மேவி அமரும் காளி கோயில்**
**கன்னியை ஏத்தல் அலகை விநோதம்**
**கனாநிலை நிமித்தம் பசியே ஒகை**
**பெருந்தேவி பீடம் அழகுற இருக்க**
**அமர்நிலை நிமித்தம் அவள்பதம் பழிச்சா**

Volume 3, SPL Issue 1, July 2025 E-ISSN: 2584-167X

**மன்னவன் வாகை மலையும் அளவு**
**மரபினி துரைத்தல் மறக்களம் காண்டல்**
**செருமிகு களத்திடை அடுகூழ் வார்த்தல்**
**பரவுதல் இன்ன வருவன பிறவும்**
**தொடர்நிலை யாகச் சொல்லுதல் கடனே (பன்னிரு., ப.35-36)**

என்ற பன்னிரு பாட்டியல் சூத்திரத்தாலும் அறியலாம். இதனைத் தேவபாணியில் அடக்குவர் பேராசிரியர் என்னும் தொல்காப்பிய உரையாசிரியர். "பரணியுள் புறத்திணை பலவும் விராய் வருதலின் அது தேவ பாணியாம் என்றது என்னையெனின் அவையெல்லாம் காடு கெழு செல்விக்குப் பரணிநாட் கூழுந்துணங்கையும் கொடுத்து வழிபடுவதோர், வழக்குபற்றி, அதனுட் பாட்டுடைத் தலைவனைப் பெய்து சொல்லப்படுவன ஆதலால் அவை யெல்லாவற்றானும் தேவபாணியாம்" என்பது அவர் உரையாகும். நச்சினார்க்கினியரும் அதே சூத்திரத்திற்கு உரையெழுதுங்கால், "பரணியாவது-காடு கெழு செல்விக்குப் பரணிநாட் கூழுந் துணங்கையும் கொடுத்து வழி படுவதோர் வழக்கு பற்றியது; அது பாட்டுடைத் தலைவனைப் பெய்து கூறலிற் புறத்திணை பலவும் விராயிற்று" என்று கூறுகிறார்.

**பரணி பெயர் காரணம்**

பரணி என்ற பெயர்க் காரணம் பலவாறாகக் கூறப்பெறுகின்றது. டாக்டர் உ.வே. சாமிநாதர் அவர்கள் பரணி என்ற நாள்மீன் காளியையும் யமனையும் தன் தெய்வமாகப் பெற்றது என்றும் அந்நாள்மீனால் வந்த பெயரே நூலுக்கும் பெயராக வந்தது என்றும் அவ்வாறு கொள்வதே ஏற்புடைத்து என்றும் கூறுகிறார்கள். இதற்கு,

**காடு கிழவோள் பூத மடுப்பே**
**தாழி பெருஞ்சோறு தருமனாள் போதமெனப்**
**பாகு பட்டது பரணிநாட் பெயரே (திவாகரம். ப.36)**

என்னும் திவாகரத்தையே அவர்கள் ஆதாரமாகக் கொண்டார்கள்.

பெரிய பரண் அமைத்து காவல் புரிவது போன்று போர்க்களத்தில் வீரன் ஒருவன் யானை மீது இருந்து எதிரிகளைத் துரத்துவதால் இப்பெயர் வந்திருக்கலாம். தொல்காப்பியத்தில் கூறப்படும் உழிஞ்சை, வாகை, பாடாண் திணை சார்ந்த சில துறைகளில் வளர்ச்சியே பரணி இலக்கியம். இத்துறைகள் புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய சங்க நூல்களில் தனித்தனி பாடல்களாக உள்ளன. களவழி என்னும் துறை களவழி நாற்பது என்னும் தனி நூலாயிற்று. முழுமையாகக் கிடைக்கும் பரணி காலத்தால் பழமையானது கலிங்கத்து பரணி ஆகும். (ராமகிருஷ்ணன் இரா, முனைவர்).

மேற்கண்ட கலிங்கத்துபரணிக்கு முன்பு சில பரணி நூல்கள் இருந்துள்ளதை பின்வரும் உலா நூல்கள் சான்று பகர்கின்றன.

**பப்பத் தொரு பசிப்பேய் பற்ற ஒரு பரணி**
**கொப்பத் தொருகனிற்றால் கொண்ட கோன் (மூவருலா. ப.57)**
**சங்கமத்துக் கொள்ளும் தனிபரணிக்கு எண்ணிறந்த**
**துங்க மதயானை துணித்தோனும் (மூவருலா. ப. 2)**

பரணியின் நோக்கம் காளியைப் போற்றுதலே என்று கொள்ள முடிகிறது; அரசனைச் சார்த்தி கூறுதல் சார்பாகவே இலக்கியத்துள் இடம்பெறுகிறது. ஆனால் அரசனது வெற்றியைப் போற்றுதலே பரணியின் நோக்கம் என்று பொதுவாகச் சொல்லப்படுகிறது. பிற்காலத்தில் தோன்றிய பரணிகளுள் போர் தவிர்த்த மெய்யியல் சார்ந்த பொருள் கூறுகளையும் நோக்கமாகக் கொண்டு பரணிகளும் உள்ளன. ஆகவே தொடக்கத்தில் காடுகெழு செல்வியைப் போற்றுதலை நோக்கமாகக் கொண்ட பரணி, பிற்காலத்தில் அரசனை மையம் இட்டு எழுந்திருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது. ஏனெனில் பரணி இலக்கியம் தேவபாணி என்றே சொல்லப்படுகிறது. தெய்வத்திற்குரிய இடம் அரசனுக்கு என்று மாறி இருக்கலாம் என்கிறார் க. வெள்ளைவாரணார். (க.வெள்ளைவாரணர். ப. 705)

**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

இது குறித்து க. ஜவகர் கூறும் போது, "இராச பாரம்பரியம், அவதாரம் ஆகியன பரணிகளில் முக்கியமாக இடம்பெற்றுள்ளன. தொல்காப்பிய புறத்திணையில் போக்கின் அடிப்படையில் கடை திறப்பு என்னும் அகத்துறை உறுப்பு இடம்பெறுமா? என்று கேட்டால், பரணி இலக்கியத்தின் ஆக்கம் அதன் - அதன் வளர்ச்சிப் போக்குகள் போன்றவற்றை நோக்கும்போது பரணி இலக்கியம் போர் நிகழ்வு, போருக்குப் பிந்தைய நிகழ்வு என்னும் இருவேறு நிலைகளில் பயணிக்கிறது என்று கூற முடியும். பிற்கால இலக்கண நூல்கள் பரணி இலக்கியத்தின் உறுப்புகளை வகைத்தொகை செய்ததிலிருந்து இதனை உறுதிப்படுத்தலாம்" என்ற விளக்கம் பரணி இலக்கியத்தின் வளநிலைகளை அறியமுடிகிறது. (க.ஜவகர், ப. 226)

மேலும், தெய்வத்திற்குரிய இடம் அரசனுக்கு என்று மாறிப் போர் வெற்றியைக் கொண்டாடும் இலக்கியமாக பரணி வளர்ச்சி அடைந்திருந்தாலும் இதற்கான அடிப்படைகள் தொல்காப்பியத்தில் இருப்பதை அறிய முடிகிறது. குறிப்பாக தொல்காப்பிய புறத்திணையியலில் வெட்சித் திணையில் இடம்பெறும் கொற்றவை நிலையும் (நூ. 1005), வஞ்சியில் இடம்பெறும் கொற்ற வள்ளையும் (நூ. 1009), தும்பையுள் இடம்பெறும் தானை, யானை, குதிரை என்னும் மூவகை படை நிலையும் (நூ. 2018), களத்தில் உயிர் நீங்கிய உடல் தரையில் விழாது உள்ள வீரர் நிலைப் பற்றியதும் (நூ. 2017), வாகைத் திணையில் இடம்பெறும் மறக்கள வேள்வி, முன்தேர்க்குரவை, பின்தேர்க்குரவை (நூ. 1025), காஞ்சித் திணையுள் இடம்பெறும் பேய் காஞ்சி, முதுகாஞ்சி (நூ. 1025), தலைவன் அரசன் இவர்களது வெற்றியைப் போற்றிப் பாடும் பாடாண் திணையும் அதன் துறைகளும் எனப் பரணியின் அமைப்பைக் காட்டுகின்றன.

மேலும், பரணி இலக்கியத்தின் தோற்றப் பின்புலத்தை ஆராயுமிடத்து ந. வீ. செயராமனின் பின்வரும் கருத்து நோக்கத்தக்கது: "பாட்டுடைத் தலைவனைப் பாராட்டுவது என்பது பரணி இலக்கியங்களின் பொதுப்பொருளமைதியாயினும் அவற்றுள்ளும் வேறுபாடுகள் உள. தம்மை ஆதரித்த அரசரிடத்துத் தாம் கொண்ட நன்றியுணர்வின் காரணமாக, அவ்வரசர்களைத் தலைவர்களாக அமைத்துப் பரணி பாடுதலே பழமையான வழக்கு. ஆனால், அரசர்பால் செலுத்தப்படும் அன்பு கடவுளிடத்தும் செலுத்தப்பட்டப்போது, கடவுளைப் பாட்டுடைத்தலைவராகவும், அரசரைச் சார்த்து வகையில் தலைவராகவும் கொண்டு பரணி இலக்கியங்கள் எழுந்தன." (ந.வீ.செயராமன், ப.106)

**கடைத்திறப்பு**

கலிங்கப் போருக்குச் சென்ற வீரர்களுடைய மனைவியர் தம் கணவரின் பிரிவால் கவன்றும் ஊடியும் தம் வாயிற் கதவுகளை அடைத்துக் கொண்டு வீட்டினுள்ளேயிருக்க, செயங்கொண்டார் அவர் வீட்டு முன்புறம் சென்று தாம் பாடும் கலிங்க வெற்றியைக் கேட்கக் கதவு திறக்குமாறு வேண்டுகின்ற செய்தியைக் குறிப்பிடுகின்றது. முதற்குலோத்துங்கன் அடைந்த கலிங்க வெற்றியைக் கொண்டாடும் விழாவுக்கு நகரத்துப் பல்வேறு மகளிரும் அதிகாலையில் எழுந்து ஒருவரை யொருவர் துயிலெழுப்புவது என்பது திருப்பாவை, திருவெம்பாவைகளின் அடிப்படைக் கருத்துக்களை யொட்டியுமிருக்கின்றது. கோகுலத்திலுள்ள ஆய்ச்சியர் கண்ணபிரானின் பேர்பாடி மகிழ்வதற்குத் தம் தோழியரின் முன்றிலிற் சென்று அழைப்பதை,

**நாயகப் பெண்பிள்ளாய் நாரா யணன் மூர்த்தி**
**கேசவனப் பாடவும்நீ கேட்டே கிடத்தியோ?**
**தேசம் உடையாய்! திறவேலோ ரெம்பாவாய் (திருப்பாவை., ப. 31)**

என்றும் ஆண்டாள் கூறுகிறார். திருவெம்பாவையிலும் சிவபெருமானின் புகழ் பாடுமாறு திருவண்ணாமலையிலுள்ள மகளிர் ஒருவரை யொருவர் வேண்டுவதாக மணிவாசகப் பெருமான்,

**முத்துஅன்ன வெண்ணகையாய்!**
**முன்வந்து எதிர்எழுந்து, என்**

**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

**அத்தன், ஆனந்தன்**
**அமுதன் என்று அள் ஊறித்**
**தித்திக்கப் பேசுவாய்;**
**வந்துஉன் கடைதிறவாய்! (திருவெம்பாவை., ப. 16)**

என்றும் அவர் பாடியுள்ளார். இங்கு, கலிங்கத்துப்பரணியில் குலோத்துங்கனின் வெற்றியைச் சிறப்பித்துப் பாடுவதற்கு நகரத்து மகளிர் ஒருவரையொருவர் சென்று அழைப்பதாகச் செயங்கொண்டார் அமைத்துள்ளார். பெண்களின் இயற்கையழகு, செயற்கையழகு, மென்மைத்தன்மை, கணவன்மாருடன் அவர்கள் ஊடியும் கூடியும் அனுபவித்த இன்பம் முதலியவற்றை நேரில் எடுத்துக்கூறி அவர்களைத் துயிலுணர்த்துதல் மகளிர்க்கே இயல்பான செயலாகும். கடைதிறப்புப் பகுதியில் துயிலெழுப்பியவர்கள், உயர் குல மகளிர், அரசனும் தலைவரும் விழைந்த மகளிர், சிறையாகவும் திறையாகவும் பெற்ற மகளிர், ஓதுதல் போன்ற காரணம் பற்றிக் கணவனைப் பிரிந்து நிற்கும் மகளிர், பொது மகளிர் ஆகிய எல்லா வகுப்பைச் சார்ந்தவர்களும் இதில் பங்கு கொள்வதை அறியலாம்.

**கொற்றவை காளியானாள்**

கொற்றவை பொருட்டுப் பரணி நட்சத்திரத்தில் கொண்டாடப் பெறும் விழாவில் மகளிர் கூழும் துணங்கையும் கொடுத்து காடு கெழு செல்வியை வழிபடும் வழக்கம் சங்ககால பாலை திணைக்குரிய தெய்வ மரபாக இருந்துள்ளதை சங்கப் பனுவல்கள் குறிப்பிடுகின்றன. கலிங்கத்துப் பரணி தோன்றிய காலம் பிற்கால சோழர் காலம் என்பதால் இக்காலத்தில் சிவனின் மனைவி காளி பாலை நிலத்துக்குரிய கடவுளாக தோற்றம் பெற்றிருக்கின்றாள். ஆனால் சங்ககால விழாவின் பொழுது துணங்கை, குரவை முதலிய கூத்துக்களையும், அம்மானை, பந்து, ஊசல் முதலிய ஆட்டங்களையும் மேற்கொண்டு தம் அரசனைப் பாட்டுடைத் தலைவனாக்கி அவன் வெற்றித் திறன்களைக் கொண்டாடியுள்ளனர்; வெற்றிக்குரிய அரசனையும் அவனது நாட்டையும் வாழ்த்தியுள்ளனர். பழங்காலத்தில் இவ்வழக்கம் உண்டென்பதை குறுந்தொகை, மதுரைக்காஞ்சி, சிலப்பதிகாரம் ஆகிய நூல்களாலும் அறியலாம். காவிரிப்பூம்பட்டினத்திலுள்ள மறக்குடிப் பெண்டிர் நாளங்காடி பூதத்திற்குப் பூவும் பொங்கலும் சொரிந்து குரவையாடி அரசனை வாழ்த்துவதை,

**காவற் பூதத்துக் கடைகெழு பீடிகை**
**புழுக்கலும் நோலையும் விழுக்குடை மடையும்**
**பூவும் புகையும் பொங்கலும் சொரிந்து**
**துணங்கையர் குரவையர் அணங்கெழுந் தாடிப்**
**பெருநில மன்னன் இருநிலம் அடங்கலும்**
**பசியும் பிணியும் பகையும் நீக்கி**
**வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி. (சிலப்பதிகாரம்., ப. 28)**

என்ற சிலப்பதிகாரப் பகுதியால் அறியலாம். அன்றியும் செங்குட்டுவனது வடநாட்டு வெற்றியை அறிந்த ஆயச் செவிலியர் அதிகாலையில் அரண்மனைக்குச் சென்று துயிலெழுப்பி யுணர்த்திப் பாட்டொடு தொடுத்து வாழ்த்தியதையும்,

**வெயிலிளஞ் செல்வன் விரிகதிர் பரப்பிக்**
**குணதிசை குன்றத் துயர்மிசைத் தோன்றக்...**
**...துணையணை பள்ளித் துயிலாற்றுப் படுத்தாங்கு**
**எறிந்துகளங் கொண்ட இயறேர்க் கொற்றம்**
**அறிந்துரை பயின்ற ஆயச் செவிலியர்**
**தோட்டுனை துறந்த துயரீங் கொழிகெனப்**
**பாட்டொடு தொடுத்துப் பல்யாண்டு வாழ்த்த (சிலப்பதிகாரும்., ப. 175, 176)**

**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

என்று இளங்கோவடிகள் சுட்டுகிறார், எனவே செயங்கொண்டாரும் செருக்களத் தியல்புகளை மகளிர்க் கூற்றில் வைத்துச் சிறப்பித்தார். அங்ஙனம் கூறுவது பண்டைய மரபை யொட்டியே உள்ளது.

**இராச பாரம்பரியம்**

சோழர் குலப்பெருமை கூறும் பகுதியாக இராசபாரம்பரியம் கலிங்கத்துப்பரணியில் இடம்பெறுகிறது. கரிகால சோழன் முதலாக பல்வேறு சோழ மன்னர்களின் பெருமைகள் இப்பகுதியில் இடம்பெறுகிறது.

**அவ் அருக்கன் மகன் ஆகி மனு மேதினி புரந்து**
**அரிய காதலனை ஆவினது கன்று நிகர் என்று**
**எவ் வருக்கமும் வியப்ப முறை செய்த கதையும் (கலிங்கத்துபரணி. ப.79)**

என்ற பாடலின் வாயிலாக, மனுநீதி சோழனின் மகன் பசுவின் கன்றை கொன்ற தவறான செயலுக்காக, அவனை தேர்ச்சக்கரத்தின் அடியில் கிடத்தி கொன்றான். பசுக்கன்றின் உயிருக்கு ஈடாக தன் மகனின் உயிரைத் தந்து நீதியை நிலை நாட்டினான் மனுநீதி சோழன்.

புறாவுக்காக தன் உடல் சதையை அறுத்துக் கொடுத்த சிபிச்சக்கரவர்த்தியின் கொடைத்திறம் பற்றியும் பின்வரும் பாடல் குறிப்பிடப்படுகிறது.

**உடல் கலக்கு அற அரிந்து தசை இட்டும் ஒருவன்**
**ஒரு துலைப் புறவொடு ஒக்க நிறை புக்க புகழும் (கலிங்கத்துபரணி. ப.80)**

மேற்குறிப்பிடப்பட்ட இரு வரலாற்று நிகழ்வுகளைப் பற்றி, சிலப்பதிகாரத்தில் வழக்குரைக்காதையில் கண்ணகி பாண்டிய மன்னனிடம் தன் கணவனின் இறப்பிற்கு நீதி கேட்கும் பொருட்டு முறையிடுகிறாள். அப்போது, மனுநீதி சோழன் பற்றியும், சிபிச்சக்கரவர்த்தி பற்றியும், சோழர்கள் நீதி வழங்கிய புகார் நகரம் பற்றியும் எடுத்துரைக்கிறாள்.

**எள்ளுறு சிறப்பின் இமையவர் வியப்பப்**
**புள்ளுறு புன்கண் தீர்த்தோன்; அன்றியும்**
**வாயிற் கடைமணி நடுநா நடுங்க**
**ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சு சுட, தான் தன்**
**அரும் பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன்**
**பெரும் பெயர்ப் புகார் என் பதியே (சிலப்பதிகாரம்., ப.168)**

இராச பாரம்பரியம் என்ற பகுதியில், சோழர்களின் குலப்பெருமையும், அவர்கள் செய்த நற்செயல்களையும் செயங்கொண்டார் கலிங்கத்துப்பரணியில் குறிப்பிடுகிறார். இந்நிகழ்வு சிலப்பதிகாரத்தில் சுட்டப்பட்டிருப்பது ஒப்புநோக்கத்தக்கதாகும்.

**போர்கள்**

முதல் இராசராசன் சேர நாட்டில் சதய விழாவை ஏற்படுத்தி அந்த நாட்டிலுள்ள உதகை என்னும் நகரை வென்றவன். *கலிங்கத்துப்பரணி* இவனை 'உதகை வென்ற கோன்' என்று குறிப்பிடுகின்றது. இவன் மகன் இராசேந்திரன் கங்கைக்கரையில் களிறுகளுக்கு நீரூட்டினான்; பர்மா தேசத்தைச் சார்ந்த கடாரத்தை வென்றான். இச்செய்தியை,

**களிறு கங்கைநீர் உண்ண மண்ணையிற்**
**காய்சி னத்தொடே கலவு செம்பியன்**
**குளிறு தெண்டிரைக் குரைக டாரமும்**
**கொண்டு மண்டலம் குடையுள் வைத்ததும் (கலிங்க., ப. 118)**

என்று இந்நூல் குறிப்பிடுகின்றது. முதல் இராசாதிராசன் மேலைச் சாளுக்கியர்களுடன் போர்புரிந்து துங்கபத்திரை நதிக்கரையிலுள்ள கம்பிலி என்னும் நகரத்தையும் அதிலிருந்த அரண்மனையையும் அழித்தொழித்த செய்தி 'கம்பிலிச்சயத் தம்ப நட்டதும்' என்று குறிக்கப்பெற்றுள்ளது. இவனும் இவன் தம்பி இராசேந்திர தேவனும் மேலைச் சாளுக்கியருடன் கிருஷ்ணா நதிக் கரையிலுள்ள கொப்பத்தில் போர் புரிந்து போர்க்களத்திலேயே முடி கவிழ்த்துக் கொண்ட செய்தியையும் இந்நூல் குறிக்கின்றது. கிருஷ்ணாவும் துங்கபத்திரையும்

கலக்கும் இடத்திலுள்ள கூடல் சங்கமத்தில் வீரராசேந்திரன் குந்தளருடன் போர் புரிந்து வெற்றியடைந்த செய்தி,

**குந்தளரைக் கூடற்சங் கமத்து வென்ற**
**கோனபயன் குவலயங்காத் தளித்த பின்னை (கலிங்க., ப. 122)**

என்ற அடியால் குறிப்பிடப் பெறுகின்றது. இது விக்கிரமசோழனுலாவில்,

**சங்ககத்துக் கொள்ளுந் தனிப்பரணிக் கெண்ணிறந்த**
**துங்கமத யானை துணித்தோனும் (மூவருலா. ப.2)**

என்று குறிப்பிடப் பெற்றுள்ளது.

பாட்டுடைத் தலைவனாகிய குலோத்துங்கன் நிகழ்த்திய போர்களனைத்தும் நூலில் நுவலப்படுகின்றன. குலோத்துங்கன் இளவரசனானவுடன் திக்கு விசயஞ் செய்து வெற்றி கொண்ட நிகழ்ச்சிகள் முதல் பின்னர் பேரரசனானவரை அவன் அடைந்த வெற்றிகள் யாவும் அவதாரம் என்ற பகுதியில் குறிப்பிடப் பெற்றுள்ளன. குலோத்துங்கன் இளவரசுப் பட்டம் எய்தியதும் போர்வேட்டெழுந்து வடதிசை நோக்கிச் சென்று மத்திய மாகாணத்திலுள்ள வத்தவ நாடாகிய சக்கரக் கோட்டத்தை வயிராகரம் என்ற இடத்தே பொருது வெற்றி கொண்டதுதான் இவனது கன்னிப்போராகும். இதனைக் கவிஞர்,

**மனுக்கோட்டம் அழித்தபிரான்**
**வளவர்பிரான் திருப்புருவத்**
**தனுக்கோட்ட நமன்கோட்டம்**
**பட்டதுசக் கரக்கோட்டம் (கலிங்க., ப. 148, 149)**

என்று குறிப்பிடுகிறார்.

போர்களத்தில் தலைவெட்டப்பட்ட உடல்கள் பேய்கள் முன்பாக துள்ளி ஆடும். தங்கள் பசிக்கு நல்ல விருந்துணவு கிடைத்தது என்ற மகிழ்ச்சியில் பேய்கள் அவற்றின் பின்னே ஆடும். இதனை கவிஞர்,

**கவந்தம் ஆட முன்பு தம்**
**களிப்பொடு ஆடு பேய் இனம் (கலிங்க., ப. 176)**

பலநாட்கள் பசியோடு இருந்த பேய்களுக்கு போர்க்களத்தில் இறந்த வீரர்களின் உடல்கள் நினைத்து மகிழ்ந்து அவற்றின் முன்பாக பேய்கள் நடனமாடுவதாக இப்பாடல் பகுதி அமைந்துள்ளது. இச்செய்தியை நோக்குமிடத்து, புறப்பொருள் வெண்பாமாலையில் வாகைப்படலத்தில் உள்ள முன்தேர்க்குரவை என்ற பகுதியில் அமைந்துள்ள பாடலானது,

**புலவாய புன்றலைப்பே யாடும் கலவா**
**அரசதிர நூறி யடுகளம் வேட்டான்**
**முரசதிர வென்றதேர் முன் (புறப்., ப.76)**

கெடாத நன்மையினைச் செய்தானாகிய இவன்(அரசன்) நெடுங்காலம் வாழ்வானாக என்று சொல்லிப், புலால் நாறும் வாயினையும் புற்கென்ற தலையினையும் உடையவான பேய்கள் தேரின் முன்பு கூத்தாடும். புறப்பொருள் வெண்பாமாலையில் கூறப்பட்டுள்ள முன் தேர்க்குரவையும், கலிங்கத்துப்பரணியில் உள்ள போர்பாடியது பகுதியில், பேய்களின் கூற்றுகள் போர்க்களத்தின் செயல்பாடுகளை நமக்கு விளக்குகின்றன. மேலும், புறப்பொருள் வெண்பாமாலையில் அமைந்துள்ள இலக்கணத்தின் வாயிலாக பரணி இலக்கியத்தின் வளர்ச்சியினை நாம் அறிந்துகொள்ள முடிகிறது.

குலோத்துங்கன் துங்கபத்திரை நதிக்கரையில் நடைபெற்ற போரில் குந்தள அரசனையும் அவன் தம்பியையும் வென்று அவர்கள் தலைநகரமாகிய கலியாணபுரத்தைக் கைப்பற்றிய செய்தியும், மீண்டும் அளத்திப் போர்க்களத்தில் குந்தள அரசனை வென்ற செய்தியும் நூலில் குறிப்பிடப் பெறுகின்றன. மைசூர் நாட்டைச் சேர்ந்த நவிலையில் பல சிற்றரசர்களை வென்று பல யானைகளைக் கைக் கொண்டமை,

**கண்ட நாயகர் காக்கும்ந விலையில்**

**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

**கொண்டதாயிரம் குஞ்சரம் அல்லவோ (கலிங்க., ப. 216)**

என்று குறிக்கப் பெறுகின்றது. பாண்டிய நாட்டின் மீது படையெடுத்த பொழுது முத்துக்கள் மிகுதியாகக் கிடைக்கும் மன்னார் குடாக் கடலைச் சார்ந்த நாட்டையும், பொதியிற் கூற்றத்தையும், கன்னியாகுமரியையும், கோட்டாற்றையும் தனக்கு உரிமையாக்கிக் கொண்டான். இவற்றை மீண்டும் பாண்டியர் கவராதவாறு கோட்டாற்றில் கோட்டாற்று நிலைப்படை என ஒரு படையை ஏற்படுத்தினான். இதனை, பின்வரும் பாடல் குறிப்பிடுகிறது.

**முள்ளாறும் கல்லாறும் தென்னர் ஒட**
**முன்னொருநாள் வாளபயன் முனிந்த போரின்**
**வெள்ளாறும் கோட்டாறும் புகையான் மூட**
**வெந்தவனம் இந்தவனம் ஒக்கில் ஒக்கும் (கலிங்க., ப. 52)**

சேரனை வெற்றி கொண்டு திருவனந்தபுரத்திற்குத் தெற்கேயுள்ள விழிஞம், காந்தளூர்ச்சாலை என்னும் சேரர் துறைமுகங்களில் இருந்த மரக்கலங்களைச் சிதைத்தழித்த செய்தி,

**வேலை கொண்டு விழிஞ மழித்ததும்**
**சாலை கொண்டதும் தண்டுகொண் டேஅன்றோ? (கலிங்க., ப. 214)**

என்ற பாடலில் குறிப்பிடப் பெற்றுள்ளது.

அரசர்கள் போருக்குப் புறப்படுங்கால் சங்கு முழங்கியும் முரசதிர்ந்தும், இயமரம் இரட்டியும், கொம்புகளை ஒலித்தும் செல்வது வழக்கம். பகையரசர் நாட்டினைப் படைகள் தாக்குங்கால் அவர் ஊரினை எரிகொளுவியும் சூறை கொண்டும் அழித்தல் இயல்பாக இருந்தது. கருணாகரனின் படை கலிங்க நாட்டினை அழித்த செய்தியை,

**அடையப் படர் எரி கொளுவிப் பதிகளை**
**அழியச் சூறைகொள் பொழுதத்தே (கலிங்க. ப. 154)**

என்று கவிஞர் கூறுவதைக் காண்க.

போர்க்களத்தில் இருதிறத்துப் படைகள் ஒன்றோடொன்று போரிடுங்கால், நால்வகைப்படையுள் ஒவ்வொரு வகைப்படையும் அவ்வப் படையுடனேயே போரிடுவது மரபு. உலக்கை, சக்கரம், குத்தம், பகழி, கோல், வேல் முதலியவை போர்க்கருவிகளாகப் பயன்பட்டன. இரவில் போர் செய்தலை மேற்கொள்ளும் வழக்கம் அக்காலத்தில் இல்லை. கலிங்கப்போரின் மேற்சென்ற படை,

**உதயத்து ஏகுந்திசை கண்டு அது**
**மீள விழும் பொழுது ஏகல் ஒழிந்து (கலிங்க., ப. 151)**

என்று கூறப்படுதலாலும், கலிங்க வேந்தன் படை சூழப்பற்றியிருந்த மலைக்குவட்டை சூரியன் மறையும் நேரத்தில் அணுகிய படை, "வேலாலும், வில்லாலும் வேலி கோலி" என்று கூறப்படுதலானும் இவற்றை அறியலாம்.

போர்க்களத்தில் தோற்றோடிய அரசர் விட்டுப் போன குடை, சாமரம் முதலியவற்றை வென்ற வேந்தர் கைப்பற்றி அவற்றைப் பெருமையுடன் பயன்படுத்துவர். குலோத்துங்கன் காஞ்சியிலமைக்கப்பெற்ற சித்திரமண்டபத்தில் வீற்றிருந்தபொழுது,

**வீழ்ந்த மன்னவர் வெந்நிடு முன் இடு**
**தங்கள் பொற்குடை சாமரம் என்று இவை**
**தாங்கள் தம் கரத்தால் பணி மாறவே (கலிங்க. ப.134)**

என்று கவிஞர் கூறுவதை நோக்குக. போரில் தோற்றோடிய அரசர்கள் மலைக்குகைகளிலும், மலைப் பள்ளத்தாக்குகளிலும், மறைவது அக்கால இயல்பாக இருந்தது. காடு, மலை, கடல் முதலியவை சிறந்த அரண்களாக மதிக்கப்பெற்றிருந்தன.

**கானரணும் மலையரணும் கடலரணும்**
**சூழ்கிடந்த கலிங்கர் பூமி**
**தான் அரணம் உடைத்தென்று கருதாது**
**வருவதும் அத்தண்டு போலும் (கலிங்க. ப. 156)**

Volume 3, SPL Issue 1, July 2025 E-ISSN: 2584-167X

என்றவற்றால் இதனை அறியலாம். சினங்கொண்ட படைவீரர் பகையரசர் நாட்டில் புகுந்து எதிர்ப்பட்ட ஆடவரை யெல்லாம் அழிப்பர். போரிற் பிடித்த அரசர்களை விலங்கிடுதலும் அக்கால இயல்பாக இருந்தது. வெற்றி கொண்ட அரசர் தாம் வென்ற இடத்தில் வெற்றித் தூண் நாட்டலும் அக்கால வழக்கமாகும். கலிங்க நாட்டில் கருணாகரன் இவ்வாறு செய்தமை,

**கடற்கலிங்கம் எறிந்துசயத்**
**தம்பம் நாட்டி (கலிங்க. ப. 190)**

என்ற அடியால் அறியப்படும்.

**முடிவுரை**

முதலாம் குலோத்துங்க மன்னன் (கி.பி.11) காலத்தில் செயங்கொண்டாரால் கலிங்கத்துப்பரணி பாடப்பட்டதாகும். இப்பரணி இலக்கியம் முதலாம் குலோத்துங்கன் மற்றும் அவரது படைத்தளபதி கருணாகரன் போன்றோரின் பெயரில் அமையாமல் போரில் தோல்வி அடைந்தவரின் பெயரில் அமைந்திருப்பது அவர்களைப் பெருமைப்படுத்தும் விதமாக உள்ளது. கலிங்கத்துப்பரணி கற்பனைவளமிக்க ஒரு படைப்பாகும். கொற்றவையை சிறப்பித்துப்பாடும் பகுதிகள், போர்களச் செய்திகள், பேய்களைப் பற்றி எடுத்துரைக்கும் பகுதிகள், மன்னர்களின் குடிவழிப் பெருமைகளை கூறும் பகுதிகள் என சிறப்புடையனவாக விளங்குகின்றன. சிற்றிலக்கியங்களில் தனிச்சிறப்புடன் திகழ்வது கலிங்கத்துப்பரணியாகும். கடைத்திறப்பு என்ற பகுதியில் போருக்குச் சென்ற கணவனின் வருகைக்காகக் காத்திருக்கும் மகளிரின் தன்மை காட்சிபடுத்தப்படுகிறது. மேலும் போர் வெற்றியைக் கொண்டாடும் பொருட்டு, மகளிரை கதவைத் திறக்குமாறு பாடல்கள் பாடப்பட்டிருக்கின்றன. இக்கருத்து இறைவனைத் துயில் எழுப்புவதற்காக கதவைத் திறக்குமாறு திருப்பாவை, திருவெம்பாவையில் பாடப்பட்டிருப்பதை முன்னைய பனுவல்கள் எடுத்துரைக்கின்றன. கொற்றவையின் தன்மை, காடு பற்றியும், கோயில் பற்றியும் பாடல்கள் அமைந்துள்ளன. மேலும் சங்க காலத்தில் போர்க்கடவுளாக இருந்த கொற்றவை என்ற தெய்வத்தன்மை சோழர் காலத்தில் காளியாக மாற்றம் பெற்றதை ஆராயவேண்டியுள்ளது. பாட்டுடைத்தலைவன் எதிரியுடன் செய்த போரில் காளி பற்றியும், பேய்கள் பற்றியும் அமைந்த போர்க்கள வருணனைகள் நம் மனக்கண்முன் காட்சியளிக்கின்றன. கலிங்கத்துப்பரணி முதலாம் குலோத்துங்கச் சோழனின் போர் வெற்றியை, அக்காலச் சமூக வாழ்க்கையினை, பரணியில் அமைந்துள்ள உறுப்புகள் கொண்டு செயல்திறனோடு திறம்பட எடுத்துரைக்கிறார் செயங்கொண்டார்.

**குறிப்புகள்**

[1] இராகவையங்கர், ரா. *பன்னிரு பாட்டியல்.* செந்தமிழ்ப்பிரசுரம், 1951.
[2] இராமகிருஷ்ணன், இரா. *சிற்றிலக்கியம் ஓர் அறிமுகம்.* சாரதா பதிப்பகம், சென்னை, 2022.
[3] கன்னையா, ஆ.வீ. *கலிங்கத்துப்பரணி.* பி.என்.அச்சுக்கூடம், 1941.
[4] கோபாலையர், அ. *மூவருலா (இராசராச சோழன் உலா),* செந்தமிழ் மந்திரம், புத்தகச்சாலை, 1925.
[5] சண்முகம் பிள்ளை, மு. சுந்தரமூர்த்தி, இ. *திவாகரம் முதல் தொகுதி,* சென்னைப் பல்கலைக் கழகம், 1990.
[6] சாமிநாதையர், உ. வே. *புறப்பொருள் வெண்பாமாலை,* உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம், 1895.
[7] சிவஞானம், ம.பொ. *சிலப்பதிகாரம் மதுரைக் காண்டம்.* அய்ந்திணைப் பதிப்பகம், 2003.
[8] சீனிவாசன், ரா. *சிலப்பதிகாரம் மூலமும் திறனாய்வும்.* அணியகம் பதிப்பகம், 1990.
[9] செயராமன், ந.வீ. *சிற்றிலக்கியச் செல்வங்கள்.* மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 2021.
[10] பாலசுப்பிரமணியன், சி. *திருப்பாவை விளக்கம்.* பாரி நிலையம், 1995.
[11] மாணிக்கவாசகன், ஞா. *கலிங்கத்துப்பரணி.* உமா பதிப்பகம், 1998.
[12] விமலானந்தம், மது. ச. *தமிழ் இலக்கிய வரலாறு.* முல்லை நிலையம், சென்னை, 2014.

**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

[13] வெள்ளைவாரணர், க. *தொல்காப்பியம் செய்யுளியல் உரைவளம்*. 1989.
[14] வைத்தியநாத தேசிகர், *இலக்கண விளக்கப் பாட்டியல்*. சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர், 1974.
[15] ஜவகர், க. *திணைக்கோட்பாடும் தமிழ்க் கவிதையியலும்*. காவ்யா பதிப்பகம், சென்னை, 2010.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை
**கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.**
இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **Creative Commons Attribution4.0** கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.